சுருக்கம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய்க்கென குளிர்பதனக்கிடங்கு அமைத்தல் – கூடுதல் நிதி – திருநெல்வேலி விற்பனைக்குழு / வாரிய நிதியிலிருந்து ரூ.32.10 இலட்சம் செலவு செய்ய வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அனுமதியளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வேவி.3) துறை

அரசாணை (3டி) எண். 227 நாள்: 21.11.2014

திருவள்ளுவர் ஆண்டு 2045,
கார்த்திகைத் திங்கள் 05–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.178, வேளாண்மை (வே.உ1) துறை, நாள் 14.10.2011.
2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.வேவதி/28599/2011, நாள் 10.10.2013 மற்றும் 13.08.2014.

-----

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு 2011–2012–ஆம் ஆண்டில் வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ரூ.2650.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டன. அவற்றில், ஒன்றாக திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய்க்கென குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்காக ரூ.200.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2) மேலே இரண்டவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அவர்கள் தற்போது இப்பணிகளை மேற்கொள்ள வேண்டி, ரூ.195.00 இலட்சம் இதுவரை 3 தவணைகளில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய செயற்பொறியாளர் அவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், மேற்படி அரசாணையில், திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் குளிர்பதனக்கிடங்கு அமைத்திடும் பணியில், மின்இணைப்பு பெறுவதற்கும், மின்மாற்றி பொருத்துவதற்கும், ஜெனரேட்டர் அமைப்பதற்கும் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், இந்த ஒதுக்கீடு மின்இணைப்பு பெறுவதற்கும், ஜெனரேட்டர் அறை கட்டுமானத்திற்கும் மட்டுமே போதுமானதாக இருந்தது என்றும், மேற்படி குளிர்பதனக்கிடங்கு தொய்வில்லாமல் இயங்குவதற்கு ஜெனரேட்டர் இயந்திரம் மிகவும் இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இக்குளிர்பதனக்கிடங்கில் மிளகாயைச் சேமித்து வைக்கவும், மிளகாயை சுலபமாக கையாளவும் அவற்றை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக எடுத்துச் செல்லவும் ஜி.ஐ.கிரில் மேடை (GI Grill Platform) மிகவும் அத்தியாவசியமானது என்பதால், மேற்படி மேற்காணும் குளிர்பதனகிடங்கின் முதல் தளத்தில் GI Grill floor அமைக்கப்பட்டுள்ளது என்றும்

(த.பி.பா.)

எனவே, கீழ்க்காணும் பணிகளுக்காக ரூ.32.10 இலட்சம் கூடுதலாக நிதி தேவைப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| 1) | Providing GI Grill platform to the first floor of 1000 MT Cold Storage for Chilies at Pavoorchatram Regulated Market in Tirunelveli District. | Rs.15.80 lakh |
| 2) | Providing 160 KVA Genset with AMF Panel and Panel Board to 1000 MT Cold Storage in the Regulated Market at Pavoorchatram in Tirunelveli District. | Rs.16.30 lakh |
| | **Total** | **Rs.32.10 lakh** |

அதற்கான திட்டமதிப்பீட்டினையும், குழுவின் தீர்மான நகலினையும் அரசிற்கு அனுப்பியுள்ளார். எனவே, திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மிளகாய்க்கென குளிர்பதன கிடங்கு அமைக்க, ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ரூ.200.00 இலட்சத்தினைத் தவிர மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.32.10 இலட்சம் (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) விற்பனைக்குழு / வாரிய நிதியிலிருந்து செலவு செய்ய உரிய அனுமதி ஆணையினை வழங்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனையேற்று, திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் அமைக்கப்படும் மிளகாய்க்கான குளிர்பதனக் கிடங்கிற்கு 160 KVA ஜெனரேட்டர் இயந்திரம் வாங்குவதற்கும், ஜி.ஐ. கிரில் மேடை அமைப்பதற்கும் தேவைப்படும் செலவினத்திற்காக கூடுதலாக ரூ.32.10 இலட்சம் (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) திருநெல்வேலி விற்பனைக்குழு நிதியிலிருந்து செலவு செய்ய வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.47320/வேளாண்மை/2014, நாள்.03.09.2014-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

ராஜேஷ் லக்கானி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை-32.
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.

(த.பி.பா.)

செயலாளர், திருநெல்வேலி விற்பனைக்குழு, திருநெல்வேலி.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை–32 மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108.
கருவூல கணக்கு அலுவலர், திருநெல்வேலி
மாநில கணக்காயர், சென்னை18/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA) சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) சென்னை–18.
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர்,
(பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை) அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>**நகல்**</u>

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச்செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு.3) துறை, சென்னை–9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)
இருப்புக்கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/11/14
பிரிவு அலுவலர்
கச
21/11/14